இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 207 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 24 – சனிக்கிழமை 08 மார்ச் 2025 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 207 : Thiruvalluvar Year - 2056 - Maasi 24 - Saturday 08 March 2025 - Madurai 16 Pages ₹ 5.00


## நாடாளுமன்றத் தொகுதிகள் மறுசீரமைப்பு:

# “கூட்டு நடவடிக்கைக் குழு” குறித்து மார்ச் 22-ல் ஆலோசனை!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.3.2025) இனமானப் பேராசிரியர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி, சென்னை அண்ணா அறிவாலயத்தில் வைக்கப்பட்டுள்ள பேராசிரியர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, பேராசியர் அவர்களின் புதல்வர் அ. அன்புச்செல்வன், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் ஆஸ்டின், ப.தாயகம் கவி, தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி எஸ்.முருகன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் அ. வெற்றியழகன், இ.பரந்தாமன், மரு. நா.எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

## 7 மாநில முதலமைச்சர்கள் – கட்சித் தலைவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, மார்ச் 8 -**

**2026ஆம் ஆண்டுக்குப் பின் மேற்கொள்ளப்படும் மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்யப்பட்டால் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், எடுக்கப்படவேண்டிய முடிவுகள் குறித்தும், ‘கூட்டு நடவடிக்கைக் குழு’ அமைத்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள 22.3.2025 அன்று ஆலோசனைக் கூட்டம் பல்வேறு மாநில முதலமைச்சர்கள் மற்றும் முன்னாள் முதலமைச்சர்கள் மற்றும் கட்சித் தலைவர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

2026 ஆம் ஆண்டுக்குப் பின் மேற்கொள்ளப்படும் மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் நாடாளுமன்றத் தொகுதிகள் மறுவரையறை செய்யப்பட்டால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், அதுகுறித்து மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறை குறித்தும் முடிவுகள் மேற்கொள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 5.3.2025 அன்று சென்னையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்றினை கூட்டினார். அக்கூட்டத்தில் இப்பிரச்சினை தொடர்பாக முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குறிப்பாக, இப்பிரச்சினையினால் பாதிக்கப்படக்கூடிய மாநிலங்களிலுள்ள கட்சிகளின் முக்கியப் பிரதிநிதிகளைக் கொண்டு “கூட்டு நடவடிக்கைக் குழு” அமைத்து, அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட தீர்மானங்களையும், அவை சார்ந்த போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும், மக்கள் மத்தியில் இப்பிரச்சினை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், அதற்கான முறையான அழைப்பை மேற்படி கட்சித் தலைவர்களுக்கு அனுப்பி வைத்திடவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 7 மாநிலங்களைச் சேர்ந்த முதலமைச்சர்களுக்கும், முன்னாள் முதலமைச்சர்களுக்கும், அம்மாநிலங்களில் உள்ள பல்வேறு முக்கிய கட்சிகளின் தலைவர்களுக்கும் நேற்று (7.3.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அதன் விவரம் பின்வருமாறு: -

இந்திய மக்களாட்சி முறையின் சாராம்சம் அதன் கூட்டாட்சித் தன்மையில்தான் அமைந்துள்ளது என்றும்; ஒரே நாடாக நமது மதிப்புறு ஒற்றுமையைப் போற்றும் அதேவேளையில், ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதன் உரிமைக் குரலை எழுப்ப உதவிடும் ஒரு அமைப்பாகவும் மக்களாட்சி முறை உள்ளது என்றும்; நம் நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் நம்மைப்போன்ற மாநில அரசுகளின் உரிமையை நிரந்தரமாகக் குறைக்கக் கூடிய அச்சுறுத்தலை தற்போது நாம் எதிர்கொண்டுள்ள நிலையில், இன்று நான் அதுகுறித்து முக்கியமாக தங்களுக்கு கடிதம் எழுதுவதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு தமது கடிதத்தில் மேலும் விவரித்துள்ளார்.

இந்தியாவில் 1952, 1963 மற்றும் 1973ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்றத் தொகுதி மறுவரையறை மேற்கொள்ளப்பட்டது. எனினும், 1976ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அரசமைப்புச் சட்டம் 42வது திருத்தத்தின்படி, மக்கள்தொகை கட்டுப்பாட்டை ஊக்குவிப்பதற்காக 2000ஆம் ஆண்டுக்குப் பிறகு

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

## ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ தொடர்பாக,

# நாடாளுமன்ற கூட்டுக்குழு மீண்டும் கூடுகிறது!

### மார்ச் 11, 17 — தேதிகளில் நடைபெறுகிறது!

*புதுடெல்லி, மார்ச் 8 -*

ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பாக, நாடாளுமன்றக் கூட்டுக்குழு கூட்டம் வரும்11 மற்றும்17ம் தேதிகளில் மீண்டும் நடைபெறுகிறது.

இந்த விவகாரம் குறித்து கருத்து தெரிவிக்குமாறு உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய்க்கு ஒன்றிய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பாக அமைக்கப்பட்ட, முன்னாள் குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையிலான குழுவினர் ஒன்றிய அரசிடம் அறிக்கை அளித்துள்ளது. இந்த அறிக்கையை நாடாளுமன்ற கூட்டுக்குழுவுக்கு அனுப்பவேண்டும் என்று காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.

இதையடுத்து, ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பான மசோதாக்கள் நாடாளுமன்றக் கூட்டுக்குழுவுக்கு ஒன்றிய அரசு அனுப்பியுள்ளது.

இந்நிலையில், ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பாக, நாடாளுமன்றக் கூட்டுக்குழு கூட்டம் வரும் 11 மற்றும் 17 ஆம் தேதிகளில் மீண்டும் நடைபெறுகிறது.

கடந்த கூட்டத்தில் உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி யூ.யூ.லலித் அழைக்கப்பட்டார். அப்போது, ஒன்றிய அரசின் ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பான இரண்டு மசோதாக்களும் குறைபாடுகள் நிறைந்ததாக உள்ளதாகவும் அரசியல் சாசனத்துக்கு எதிராக உள்ளதாகவும் உச்சநீதிமன்றம் சென்றால் மசோதாக்கள் ரத்து செய்யப்பட வாய்ப்புள்ளது என்று எச்சரித்திருந்தார்.

இந்நிலையில், வரும் 11 ஆம் தேதி நடைபெற உள்ள கூட்டத்துக்கு முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி ரஞ்சன் கோகாய் அழைக்கப்பட்டுள்ளார். இவர் மாநிலங்களவை நியமன உறுப்பினராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொதுமக்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்திட

# ஆட்டோ ரிக்ஷா - வாடகைக் கார்களுக்கு காவல் உதவி குறியீடு!

### சென்னை பெருநகர காவல்துறை சார்பில் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, மார்ச் 8 –**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.3.2025) தலைமைச் செயலகத்தில், சென்னை பெருநகர காவல்துறையின் முன்முயற்சியாக, சென்னை மாநகரில் பொதுமக்கள் ஆட்டோ ரிக்ஷாக்கள் மற்றும் வாடகை கார்களில் பாதுகாப்பான பயணம் மேற்கொள்ளும் வகையில் காவல் உதவி QR குறியீடுகளை வழங்கிடும் விதமாக ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்களிடம் QRகுறியீடுகளை வழங்கினார்.**

சென்னை மாநகருக்குள் பயணிகள், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை மேம்படுத்தவும், பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யவும், சென்னை பெருநகர காவல்துறை, ஆட்டோரிக்ஷாக்கள் மற்றும் வாடகை கார்களுக்கு QR குறியீடு அடிப்படையிலான அவசரகால பதில் அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த முயற்சி, நிகழ்நேர கண்காணிப்பு, அவசரகால பதில் வழிமுறைகள் மற்றும் ஏற்கனவே உள்ள வாகன வழி தளங்களுடன் தடையற்ற ஒருங்கிணைப்பை வழங்க, இந்த தொழில்நுட்பம் சார்ந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை பயன்படுத்துகிறது.

சென்னை மாநகரில் காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்கள் / மாநகராட்சிகளில் இருந்து வரும் வாகனங்கள் உட்பட 89,641 ஆட்டோரிக்ஷாக்கள் இயங்குகின்றன. இவற்றில், 78,000 ஆட்டோரிக்ஷாக்கள் ஊபர், ரேபிடோ மற்றும் ஓலா போன்ற வாகன சேவைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

பயணிகள் மற்றும் ஓட்டுநர்களின் பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில், சென்னை பெருநகர காவல்துறை முதல் கட்டமாக, ஒவ்வொரு ஆட்டோ ரிக்ஷாக்கள் மற்றும் ஷேர் ஆட்டோக்களுக்கும் 88,859 தனிப்பயனாக்கப்பட்ட (Customized) மற்றும் பிரத்யேக தனித்துவமான QR குறியீட்டை உருவாக்கியுள்ளது. இந்த QR குறியீடு ஆட்டோ ரிக்ஷா / வாடகை கார்களின் ஓட்டுநர் இருக்கைக்குப் பின்னால் ஒட்டப்படும். இதை பயணிகள் எளிதாக ஸ்கேன் செய்து கொள்ளலாம்.

அவசரநிலை ஏற்பட்டால், SOS பட்டனை அழுத்தினால், சென்னை பெருநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறைக்கு ஒரு எச்சரிக்கை குறுஞ்செய்தி அனுப்பப்படும், இது ஆட்டோரிக்ஷாவின் சரியான இடம் மற்றும் அதன் விவரங்கள், உரிமையாளரின் விவரங்கள் போன்றவை கட்டுப்பாட்டு அறைக்கு தெரியவரும். கூடுதலாக, பயணிகள் 112 என்ற அவசர கட்டுப்பாட்டு அறை எண்ணிற்கு அழைத்து உடனடி உதவியை உறுதிசெய்யும் வசதியும் இதில் உள்ளது.

இப்புதிய QR குறியீட்டின் முக்கிய நன்மை என்னவென்றால், SOS எச்சரிக்கை அழுத்தும்போது, பயணிகளின் சரியான இடம் காவல் கட்டுப்பாட்டு அறைக்கு உடனடியாகத் தெரியவருவதால், குறிப்பாக இரவு நேரங்கள் அல்லது தனி சவாரிகளின் போது காவல்துறையினரின் ரோந்து வாகனங்களின் மூலம் துல்லியமாக சம்பவ இடத்திற்கு சென்று உதவியை அணுகும் வசதியும் உள்ளது.

மேலும், சென்னை பெருநகர காவல் துறை, Rapido, Ola மற்றும் Uber போன்றவற்றுடன் இணைந்து, தங்கள் அவசர எச்சரிக்கைகளை சென்னை பெருநகர காவல் கட்டுப்பாட்டு அறையுடன் ஒருங்கிணைக்கிறது. இந்த வாகனங்களில் பயணம் செய்பவர்களின் பயன்பாடுகள் மூலம் செய்யப்படும் எந்தவொரு SOS அழைப்பும் சென்னை பெருநகர காவல் கட்டுப்பாட்டு அறைக்கு நேரடியாக அனுப்பப்படும், இதனால் காவல்துறை அதிகாரிகள் பயணிகளின் வேண்டுகோளின் பேரில் பயணத்தின் நிகழ்நேரத்தை கண்காணிக்க முடியும். அவசரநிலை ஏற்பட்டால், போக்குவரத்து கட்டுப்பாட்டு அறை காவலர்களால் வாகனத்தின் நிகழ்நேரத்தை கண்காணித்து, அதற்கேற்ப ரோந்து வாகனங்களின் மூலம் உதவிட முடியும்.

பெண்கள், குழந்தைகள் மற்றும் பெருநகரத்திற்கு பயணிக்கும் அனைத்து பயணிகளுக்கும் பாதுகாப்பான பயணத்தை இப்புதிய QR குறியீடு உறுதி செய்கிறது. இதன்மூலம், சென்னை முழுவதும் ஒரு விரிவான பாதுகாப்பு வலையமைப்பு உருவாக்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், கூடுதல் ஆணையர் (போக்குவரத்து) ஆர்.சுதாகர் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கன்னட வளர்ச்சி ஆணையம்

# இருமொழிக் கொள்கைக்கு ஆதரவு!

### ஆணையத் தலைவர் அறிவிப்பு!

*பெங்களூரு, மார்ச் 8 -*

ஒன்றிய பா.ஜ.க. அரசின் மும்மொழிக் கொள்கை திணிப்பு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், இருமொழிக் கொள்கைக்கு கன்னட வளர்ச்சி ஆணையம் ஆதரவு தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக்கொள்கை பின்பற்றப்பட்டு வருகிறது. இந்நிலையில், ஒன்றிய பா.ஜ.க. அரசு புதிய கல்விக்கொள்கை மூலம் மும்மொழிக் கொள்கையை பின்பற்ற வேண்டும் என, வலியுறுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசு இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இதனிடையே அண்டை மாநிலமான கர்நாடகாவில் இருமொழிக் கொள்கையை செயல்படுத்த வேண்டும் என, அம்மாநில முதலமைச்சர் சித்தராமையாவுக்கு கன்னட வளர்ச்சி ஆணைய தலைவர் கடிதம் எழுதி உள்ளார். அந்த கடிதத்தில், கன்னட மொழியை பாதுகாக்க வேண்டுமானால் இருமொழிக் கொள்கையை பின்பற்ற வேண்டும் என்று கன்னட வளர்ச்சி ஆணையத் தலைவர் புருசோத்தம் பிளிமலே தெரிவித்துள்ளார்.